**செ.வெ.எண்.34** **நாள் : 15.03.2021**

# பத்திரிக்கைச் செய்தி

இந்திய தேர்தல் ஆணையம், தமிழ்நாடு சட்டப்பேரவைக்கான 2021 பொதுத்தேர்தல் மற்றும் 39. கன்னியாகுமரி பாராளுமன்ற இடைத்தேர்தலில் மாற்றுத்திறனாளிகள், 80 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் கோவிட் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்ட அல்லது நோய் தொற்று இருக்கலாம் என யூகத்திறகு உரிய வாக்காளர்கள் ஆகியோருக்கு விருப்பத்தின் அடிப்படையில் தபால் வாக்கு முறையில் வாக்களிக்கும் வசதியை அளித்துள்ளது.

தேர்தல் நடத்தும் அலுவலரால் (Returning Officer) தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில், தபால் ஓட்டுப் பெறத் தகுதியான மாற்றுத்திறனாளிகள், 80 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் கோவிட் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்ட அல்லது நோய்த் தொற்று இருககலாம் என யூகத்திற்கு உரிய வர்ககாளர்களின் வீடுகளுக்கு சென்று தபால் வாக்கு கோரும் விண்ணப்பங்களை (விண்ணப்பப் படிவம்-12D) மேற்படி வாக்காளர்களிடம் அளிப்பார்கள். தேர்தல் அறிவிக்கை வெளியிடப்பட்ட 5 நாட்களுக்குள் தபால் மூலம் வாக்களிக்க விருப்பம் உள்ளவர்களிடமிருந்து ஒப்புதல் பெறுவதுடன் விண்ணப்பப் படிவம்12D- யை பூர்த்தி செய்து பெற்றுக் கொள்வார்கள்.

மேலே குறிப்பிட்ட மூன்று வகையான வாக்காளர்கள் தபால் வாக்களிக்க விருப்பம் கோரமுடியும். விண்ணப்பப் படிவம் 12 D-யுடன் தேர்தல் ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் என்பதற்கான சான்றாவணங்கள் மற்றும் கோவிட்-19 நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சான்றாவணங்கள் முறையே சம்பந்தப்பட்ட வாக்காளர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். உரிய காலத்திற்குள் மற்றும் உரிய முறையில் பெறப்பட்ட தபால் ஓட்டிற்கான விண்ணப்பங்கள் முறையாக இருக்கும் பட்சத்தில் அவ்விண்ணப்பங்கள் தேர்தல் நடத்தும் அலுவலரால் (RO) பரிசீலிக்கப்படும்.

தேர்தல் நடத்தும் அலுவலரால் (RO), வாக்காளர்கள் தந்த விவரங்களை வாக்காளர் பட்டியலுடன் ஒப்பீடு செய்தும், முறையான அலுவலரால் சான்றாவணங்கள் வழங்கப்பட்டுள்ளது என்பதை ஆய்வு செய்தும், அவை சரியாக இருக்குமாயின், அவ்வாக்காளர்களுக்கு தபால் வாக்கு அளிக்கப்படும்.

தபால் ஓட்டுகளை பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் 12D-யில் அளித்துள்ள முகவரிக்கு வாக்குப்பதிவு செய்யும் அதிகாரிகள் குழு செல்லும். மேற்கண்ட வாக்காளர்களின் வசிப்பிடத்திற்கு செல்லுமுன், செல்ல இருக்கும் நாள் மற்றும் நேரம் குறித்த விவரங்களை தொலைபேசி மூலமாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ வாக்குப்பதிவு செய்யும் அதிகாரிகள் தெரிவிப்பார்கள். அவ்வாறு தபால் ஓட்டு பெறுவதற்காக அதிகாரிகள் வரும்போது, மேற்படி ஓட்டளிப்பதை பார்வையிட தகுதியான ஒருவரை வாக்காளர்களே தேர்வு செய்து பார்வையிட செய்யலாம்.

தபால் ஓட்டுகளை பதிவு செய்வதற்காக அமைக்கப்பட்ட அதிகாரிகள் குழு, வாக்காளர்களுக்கு வாக்குப்பதிவு செய்யும் வழிமுறைகளை தெளிவுபடுத்துவார்கள். வாக்காளர்களால் சரியாக பூர்த்தி செய்யப்பட்டு, கையொப்பமிடப்பட்டு, வாக்குப்பதிவு அதிகாரியால் சான்றளிக்கப்பட்ட உறுதியளிக்கும் படிவமான 13 A- படிவத்துடன், ஓட்டு பதிவு செய்யப்பட்ட வாக்குச் சீட்டை கடித உறை (படிவம் 13 B) யினுள் வைத்து, ஒட்டி அதனை பெரிய கடித உறையான (படிவம் 13 C) யினுள் வைத்து, ஒட்டி அக்குழுவிடம் வாக்காளர்கள் ஒப்படைக்க வேண்டும். வாக்காளர்கள், எவ்வித அச்சுறுத்தல்களுக்கும் ஆட்படாமல் சுயமாக அவர்களது தேர்விற்குரிய வேட்பாளர்களுக்கு ஓட்டளித்தார்கள் என்பதை தபால் வாக்குப்பதிவு செய்யும் அதிகாரிகள் உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். வாக்குப்பதிவு அதிகாரிகள் வாக்காளர்களின் இல்லங்களுக்குச் செல்லும்போது போதிய காவல்துறை பாதுகாப்பு வழங்கப்படும். வாக்குப்பதிவு செய்யும் அதிகாரிகள் கொண்ட குழுவோடு ஒரு நுண் பார்வையாளரும் (Micro Observer) செல்வர்.

தபால் ஓட்டளிக்கும் நிகழ்வு முழுவதும் காணொளியாக பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு காணொளி பதிவு செய்யும் போது ரகசிய வாக்குமுறை கடைபிடிப்பதை மீறாமல் பதிவு செய்யப்பட வேண்டும். வாக்குப்பதிவு செய்ய வரும் குழுவின் வருகையின் போது வாக்காளர் வீட்டில் இல்லையெனில், முன்கூட்டியே தகவல் அளித்து இரண்டாவது முறையும் வருகை தருவர். அதிகாரிகளது இரண்டாவது வருகையின் போதும் வாக்காளர் வீட்டில் இல்லையெனில் மீண்டும் வருகை தரமாட்டார்கள். தபால் வாக்கு அளிக்க அனுமதிக்கப்பட்ட மேற்கண்ட வாக்காளர்கள் வாக்குச்சாவடிக்குச் சென்று வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

149-அரியலூர் மற்றும் 150-ஜெயங்கொண்டம் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் இதற்கான உரிய ஏற்பாடுகளை மேற்கொள்வார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**